C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

**அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குத் காணிக்கையாக வைத்தார்கள்.**

பொழிவு : 14 DECEMBER '2022 ஆகாரம் : 12




*And when they had come into the house, they saw the young child with Mary His mother, and fell down and worshiped Him. And when they had opened their treasures, they presented gifts to Him: gold, frankincense, and myrrh*

*Matthew:2:11*

# Christmas Program Plan - 2022

| Event | Date | Time |
|---|---|---|
| 1.ECUMENICAL CHRISTMAS CAROL SERVICE-2022<br>அனைத்து திருச்சபையின் கிறிஸ்துமஸ் பாடல் ஆராதனை -2022 | 3RD DECEMBER -2022<br>(SATURDAY) | 6:30PM |
| 2. CHILDREN BIBLE SCHOOL (CBS)<br>CHILDREN CHRISTMAS PROGRAM-2022<br>சிறுவர் கிறிஸ்துமஸ் கலைநிகழ்ச்சி -2022 | 10TH DECEMBER -2022<br>(SATURDAY) | 7.30PM |
| 3.FAMILY CHRISTMAS SING SONG SERVICE -2022<br>குடும்ப கிறிஸ்துமஸ் கீத ஆராதனை -2022 | 17TH DECEMBER -2022<br>(SATURDAY) | 7.30PM |
| 4. CHRISTMAS TREE -2022<br>கிறிஸ்துமஸ் மரவிழா-2022 | 24TH DECEMBER -2022<br>(SATURDAY) | 7.30PM |
| 5. CHRISTMAS SERVICE -2022<br>கிறிஸ்துமஸ் ஆராதனை -2022 | 25TH DECEMBER -2022<br>(SUNDAY) | 5.30AM |
| 6. CHRISTMAS CAROL ROUNDS -2022<br>கிறிஸ்துமஸ் கீதபவனி-2022 | 5TH - 15TH DECEMBER -2022 | - |
| 7. 12- HRS CHAIN PRAYER -2022<br>12மணி நேரம் சங்கிலி தொடர் ஜெபம் -2022 | 31ST DECEMBER -2022<br>(SATURDAY) | 6.00AM-<br>6.00PM |
| 8. YEAR END -2022/ NEW YEAR SERVICE -2023<br>பழைய ஆண்டு-2022 / புதிய ஆண்டு ஆராதனை | 31ST DECEMBER -2022/<br>1ST JANUARY -2023 | - |




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

பெத்லகேம் பாலகன் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் திருச்சபை குடும்பத்தார் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் & புதிய ஆண்டு—2023 நல்வாழ்த்துக்கள்! ஸ்தோத்ரம்!!

> 'தேவதூதன் அவர்களை நோக்கி; பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாகும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்'
>
> —2நாளாகமம்:32:30
>
> *'Then the angel said to them, "Do not be afraid, for behold, I bring you good tidings of great joy which will be to all people'*
>
> - 2 Chronicles:32:30

## இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்தியை கேட்ட மேய்ப்பர்கள்

- இயேசுவை பார்க்க விரும்பினார்கள்
- இயேசுவை பார்த்தார்கள்
- இயேசுவை குறித்து அறிவித்தார்கள்

இன்றைக்கு நாமும் கிறிஸ்து பிறப்பின் நாளை கொண்டாடுகின்றவர்களாக மாத்திரம் இல்லாமல் கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை அறிவிக்க அழைக்கபடுகிறோம்.

## அட்வென்ட் (ADVENT)

கிறிஸ்துவின் மந்தையாகிய இறைமக்களாகிய நாம் இந்த "அட்வென்ட்" காலங்களை அனுசரிக்க அழைக்கபடுகிறோம்.இந்த "அட்வென்ட்" காலம் என்பது இயேசுவின் வருகையை மிகுந்த எதிர்நோக்கும் காலம் ஆகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக மேசியாவின் வருகையை மிகுந்த ஆவலோடு இஸ்ரயேல் மக்கள் எதிர்பார்த்தனர். அவர்களுக்கு விடுதலை வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தது. யூதர்களுக்கு விடுதலை அளிப்பவர் மேசியா என்று நம்பி எதிர்பார்த்தனர். இதனையே ஒரு கொண்டாட்டமாக நினைத்து கொண்டாடினார்கள். இந்த கொண்டாட்டத்தை மகிழ்ச்சியாக கருதினார்கள். இதையே தீர்க்கதரிசிகள் நற்செய்தியாக கொண்டாடினார்கள். (CELEBRATING THE GOOD NEWS) நாமும் இந்த அட்வென்ட் காலங்களில் கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை கொண்டாட அழைக்கப்படுகிறோம். இந்த மாதம் முழுவதும் கிறிஸ்து பிறப்பின் திருநாளாக பல்வேறு நிலைகளில் திருச்சபை குடும்பங்களாக கொண்டாட அழைக்கப்படுகிறோம். திருச்சபையின் பாடல் குழுவாக, சிறுவர்களாக, குடும்பங்களாக, பல்வேறு சிறப்பு ஆராதனையின் வழியாக கிறிஸ்து பிறப்பின் திருநாளாக அனுசரிக்க இருக்கிறோம். திருச்சபை குடும்பத்தார் அனைவரும் ஜெபத்துடன் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

## குடும்ப ஜெபகூடுகை (COTTAGE PRAYER METTING)

வருகின்ற புதிய ஆண்டு —2023 ஜனவரி மாதம் முதல் நமது திருச்சபையின் குடும்பங்களில் குடும்ப ஜெபம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. எனவே ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை மாலை.7.30 மணிக்கு குடும்ப ஜெபம் நடைபெறும். திருச்சபையின் குடும்பத்தார் உங்கள் வீட்டில் நடத்துவதற்கு முன்கூட்டியே தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்ந்து இந்த காலங்களில் நமது வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபைகளுக்காக, ஊழியர்களுக்காக,

ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலைவாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்களின் கல்விக்காக அத்துடன் அவர்களின் ஆவிக்குரிய வாழ்விற்காக ஜெபிக்க அழைக்கபடுகிறோம். மேலும் நமது திருச்சபையின் அனைத்து திருப்பணிகளுக்காக, திருச்சபையின் அனைத்து குடும்பங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கும் மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். வருகின்ற புதிய ஆண்டு –2023 புதிய தரிசனங்களுடன் எதிர்நோக்கவும், புதிய நண்மைகள், புதிய ஆசிர்வாதம் பெற்றுக்கொள்ள ஆண்டவர் நமக்கு துணை செய்வாராக

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்.



Rev.S.P.Baskar



# கிறிஸ்துமஸ் செய்தி

## இயேசுவில் வெளிப்படும் கடவுளின் மாட்சி

## *Manifestation of Christ*

- லூக்கா:2:1-12

அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்.

-மத்தேயு:2:11

*And when they had come into the house, they saw the young child with Mary His mother, and fell down and worshiped Him. And when they had opened their treasures, they presented gifts to Him: gold, frankincense, and myrrh.*

*- Matthew:2:11*

### கிழக்கில் இருந்து வந்த ஞானிகள்

கிழக்கில் இருந்து வந்த ஞானிகள் ஆங்கிலத்தில் *MAGI, MAGGIE, THREE KING'S* அரசர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் காஸ்பர் *(CASPER)* மெல்கோயர் *(MELCHOIR)* பெல்தாஷர் *(BELTHASAR)* என்று வரலாறு கூறுகிறது. இவர்கள் மீதியா இனத்தைச் சேர்ந்தவர்கள். மீதியர் தேசம் பாரசீக அரசாட்சிக்குட்பட்டது. இவர்கள் லேவியர், ஆசாரியர்கள் போலவே மிகவும் மக்களிடம் மதிப்பை பெற்றவர்கள். இவர்கள் தூய்மையானவர்கள், ஞானவான்கள் இவர்கள் தத்துவ கோட்பாடு, அறிவியல், மருத்துவம், விண்ணியல் *(ASTROLOGY)* படித்தவர்கள். விண்மீன்களின் அசைவை வைத்து எதிர்காலத்தைக் குறித்து கூறுபவர்கள். எனவே தான் இயேசு கிறிஸ்து பிறந்தவுடன் விண்மீன் வருவதை கண்டு அதை தொடர்ந்து வருகின்றனர்.

## ஞானிகளின் செயல்பாடு

- நெடுஞ்சான்கிடையாக (சாஷ்டாங்கமாக) வணங்குவது... (உலகின் அனைத்து ஞானமும் இயேசுவின் முன்பாக வணங்குவது)
- அவர்கள் படைத்த பொருள்
- பொண் (GOLD) (இயேசு கிறிஸ்து இந்த உலகின் அரசர் என்பதாகும்)
- வெள்ளைப்போலம் (இயேசு கிறிஸ்து ஒரு ஆசாரியன் என்பதாகும்)
- சாம்பிராணி (இயேசு கிறிஸ்து 33 வருடத்திற்கு பிறகு சிலுவையில் பலியாகப் போகிறார் என்பதின் அடையாளம்)

## தியாகத்தின் வழியே கடவுளின் இறைமாட்சி – மத்தேயு:2: 16–18

இயேசுகிறிஸ்து மனிதகுமாரனாய் வந்த நாள் தான் கிறிஸ்துமஸ் பண்டிகையாக கொண்டாடப்படுகிறது. இது மனிதருள் கடவுளின் மாட்சி - காட்சியாக வெளிப்படுவதை புரிந்துக் கொள்கிறோம்.இந்த இறைமாட்சியை பெறுவது என்பது சுலபமான காரியம் இல்லை. இதில் சில இழப்புகளும் ஏற்படுகிறது.இயேசுவின் பெற்றோர்கள் இயேசுவின் பிறப்பிற்கு பிறகு தங்கள் கவுரவத்தை இழுத்து அகதிகளாக மாறினார்கள். ஞானிகள் ஏரோதை சந்தித்ததினால் பெத்லகேமிலும் அதின் சுற்றுப்புறம் எங்கும் உள்ள இரண்டு வயது குழந்தைகள் கொலை செய்யப்படுகின்றனர். (மத்:2:16-18) கிறிஸ்துவின் பிறப்பு என்பது அவருடைய சிலுவையில் இறந்த பொழுது தான் உண்மையாகவே இவர் இறைமகன் என்று நூற்றுவர் தலைவன் (நூற்றுக்கதிபதி) கூறுகிறார். எனவே இழப்பின்றி மாட்சியில்லை என்பதை கிறிஸ்துவின் மரணத்தின் வழியாக வெளிப்படுத்துகிறது.

## தேடலின் வழியே கடவுளின் இறைமாட்சி – யோவான்:1:46

ஞானிகள் பெர்சியா தேசத்திலிருந்து யூதருக்கு அரசர் பிறப்பார் என்ற செய்திக் கேட்டு நீண்ட தூரம் பயணம் செய்து இயேவை கண்டனர். இவர்களின் பயணம் தூரம், பள்ளம், மேடு, மலை கடந்து வரவேண்டும். மேலும் மழை, குளிர், வெயில்

போன்ற இயற்கை மாற்றங்களுக்குட்பட்ட பயணம்.இது ஒரு விசுவாசத்தின் பயணம். யூதருக்கு அரசர் பிறப்பார் என்று கேள்வியுற்று இயேசுவை காணசெல்லும் பயணம் ஆகும். யோவான்:1:46 - இல் காணும் போது. " இறைவனை தேடுவதின் வழியாக தான் அவரின் மாட்சிமையை உணரமுடியும்" எனவே இந்த ஞானிகள் மூவரும் வெகுதூரம் பயணம் செய்து இயேவை பணிந்துக்கொண்டார் கள். இவர்களுக்கு ஞானிகள் என்ற எண்ணம் இல்லாமல் இயேசுவை சாஷ்டாங்கமாக பணிந்து வணங்கினார்கள்.இந்த குழந்தை மானுடத்தை மீட்கப் போகிறது. கடவுளின் மாட்சிமையை வெளிப்படுத்தபோகிறது என்பதை மட்டுமே உணர்ந்தார்கள்.

## அடையாளத்தின் வழியே கடவுளின் இறைமாட்சி – ஏசாயா:9:6

மனுக்குலம் அடைளாளத்தை தேடிக்கொண்டிருக்கிறது. அடையாளம் என்பது கடவுள் இருக்கிறார் என்று நம்புவது ஆகும். கடவுளின் அடையாளம் என்பது ஏசாயா:45:21- இல் காணும்போது " அவர் நீதியுள்ளவர், அவர் மீட்பர், அவர் உண்மையுள்ளவர்." என்பதாகும். கிறிஸ்து பிறப்பில் விண்மீன் கிழக்கத்திய ஞானிகளுக்கு ஓர் அரசர் யூதர்களுக்கு பிறந்திருக்கிறார் என்ற செய்தி யூதர்களுக்கு மட்டும் கிறிஸ்து பிறக்கவில்லை உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் என்பதே பெத்லகேமில் பிறந்த இயேசுவின் பிறப்பில் விண்மீன் வாயிலாக உலகம் முழுவதும் காட்டப்படுகிறது.அவரது பிறப்பில் உலகம் அனைத்து உயர்வடையும் என்ற நம்பிக்கைக் கொண்டு அவரைக் காண ஞானிகள் விரைந்து வந்தனர். எனவே விண்மீன் அடையாளம் விடுதலை மற்றும் மீட்பிற்கான அடையாளம் ஆகும்.

## நிறைவாக

இயேசுவின் வெளிப்பாடு என்பது கடவுளின் மாட்சி என்பதை அவருடைய.....

- பிறப்பில்
- வாழ்வில்
- பணியில்
- மரணத்தில்
- உயிர்த்தெழுதலில்

வழியாக நிறைவேறுகிறது என்பதை புரிந்துக் கொண்டு அந்த இறைமாட்சிமையை உலகில் நிறைவேற்ற அறிவிக்க அழைக்கபடுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக....

கிறிஸ்துவின் உண்ணத் பணியில்...

உங்கள் ஆயர்.....

Rev.S.P.Baskar



# கடவுளின் வாக்குறுதிகளை கொண்டாடுதல் - மரியாவும், எலிசபெத் சந்தித்தல்

## *Celebrating the Promise of God - Meeting of Mary with Elizabeth*

பெத்லகேம் பாலகன் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் & புதிய ஆண்டு நல்வாழ்த்துக்கள்! ஸ்தோத்ரம்!!

**"அந்நாட்களில் மரியாள் எழுந்து, மலைநாட்டிலே யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குத் தீவிரமாய்ப் போய், சகரியாவின் வீட்டுக்குள் பிரவேசித்து, எலிசபெத்தை வாழ்த்தினாள்"**

**– லூக்கா: 1:39,40**

*“Now Mary arose in those days and went into the hill country with haste, to a city of Judah, And entered the house of Zacharias and greeted Elizabeth”*

*- Luke: 1:39,40*

## முன்னுரை:

கிறிஸ்து பிறப்பின் வழியாக அநேக வாக்குறுதிகளைப் பலர் பெற்றுக் கொள்கிறார்கள், அதின் வழியாக மகிழ்ச்சி, சமாதானம் நிறைந்த வாழ்வு பெறுகின்றார்கள். இங்கு இரு பெண்கள் (மரியாள் – எலிசபெத்) கடவுளின் வாக்குறுதிகளை தங்கள் வாழ்க்கையில் பெற்றுக் கொண்டார்கள். இருவரும் கடவுளின் தூதுவன் மூலமாக பெற்றுக் கொண்டார்கள். அப்பொழுது அவர்கள் பெற்றுக்கொண்ட அனுபவம் சற்று மனித வாழ்விற்கு அப்பாற்பட்டது, அதாவது எதிர்பாராத ஒன்று நினைத்துக் கூட பார்க்க முடியாதது, அத்தகைய நிலையில் கடவுளின் வாக்குறுதி இருவருக்கும் கிடைக்கின்றது. இந்த அனுபவம் விசுவாச வாழ்விலும், உலக வரலாற்றிலும் மிகவும் சிறப்பு தன்மை பெற்றவை ஆகும். இவர்களின் சந்திப்பின் அனுபவத்தை சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

## இயேசுவின் தாயாகிய மரியாள்– யோவானின் தாயாகிய எளிசபெத்தை வாழ்த்துதல்..

இயேசுவின் தாயாகிய மரியாள், யோவானின் தாயாகிய எலிசபெத்தை வாழ்த்தும்போது, எலிசபெத்தின் வயிற்றிலிருந்து குழந்தை துள்ளிற்று, இங்கு கடவுளின் செயல்பாட்டினை

பார்க்கிறோம். கடவுளின் வாக்கு என்பது உயிர் தன்மை கொண்டது. அது சத்தியம், மனக்குலத்தை நலவழிப்படுத்தும். அந்த வார்த்தை நிறைவான சத்தியம் ஆகும். இங்கு இந்த இரு பெண்களும் (மரியாள் – எலிசபெத்) கடவுளின் தூதன் மூலமாக செய்தியை அதாவது கடவுளின் வாக்குறுதிகளைப் பெற்றுக் கொண்டார்கள். அந்த நிமிடம் முதல் இருவரும் கடவுளின் பிரசன்னத்தை தங்கள் உடலிலும், உள்ளத்திலும், உறவிலும் பெற்றுக் கொண்டார்கள், இந்த இருவரின் வாழ்விலும் உறுதிமொழி அல்லது வாக்குறுதியே வாழ்க்கையை மாற்றி விட்டது

## யோவானின் தாயாகிய எலிசபெத் – இயேசுவின் தாயாகிய மரியாளை வாழ்த்துதல்

யோவானின் தாயாகிய எலிசபெத் ஆண்டவரின் தாயாகிய மரியாளை வாழ்த்துகிறார்.இது அவர்கள் பெற்றிருந்த பரிசுத்தாவியின் வெளிப்பாடு ( அ ) வழிநடத்துதல் என்று கூறலாம். இங்கு ஆண்டவரின் தாய் என்று சொல்லுவது பரிசுத்தாவியானவரின் வெளிப்பாட்டைக்காணலாம். யாரும் அறியாத ஒரு வரலாற்று நிகழ்வு தான் இயேசுவின் பிறப்பு ஆகும். இங்கு எலிசபெத் இயேசு, தாயாகிய மரியாள், இவற்றைக் குறித்து பகிர்ந்து கொள்வது என்பது பரிசுத்த ஆவியின் வெளிப்பாடாகவும், வாக்குறுதியாகவும் காணமுடிகிறது.இது மரியாளின் வாழ்வில் ஏற்படுகின்ற மாற்றத்திற்கான அடையாளம் ஆகும். அற்பமான என்னை, ஒதுக்குப்புறத்தில் இருந்த என்னை தெரிவு செய்து இயோசுவின் தாயாக அற்பணிக்க கடவுளின் வாக்குறுதி செயல்பட்டது என்பதை மரியாள் அறிக்கை செய்கிறார்.

## நிறைவாக

யோவானின் தாயாகிய எலிசபெத் ஆண்டவரின் தாயாகிய மரியாளை வாழ்த்துகிறார்.இது அவர்கள் பெற்றிருந்த பரிசுத்தாவியின் வெளிப்பாடு ( அ ) வழிநடத்துதல் என்று கூறலாம். இங்கு ஆண்டவரின் தாய் என்று சொல்லுவது பரிசுத்தாவியானவரின் வெளிப்பாட்டைக்காணலாம். யாரும் அறியாத ஒரு வரலாற்று நிகழ்வு தான் இயேசுவின் பிறப்பு ஆகும். இங்கு எலிசபெத் இயேசு, தாயாகிய மரியாள், இவற்றைக் குறித்து பகிர்ந்து கொள்வது என்பது பரிசுத்த ஆவியின் வெளிப்பாடாகவும், வாக்குறுதியாகவும் காணமுடிகிறது.இது மரியாளின் வாழ்வில் ஏற்படுகின்ற மாற்றத்திற்கான அடையாளம் ஆகும். அற்பமான என்னை, ஒதுக்குப்புறத்தில் இருந்த என்னை தெரிவு செய்து இயோசுவின் தாயாக அற்பணிக்க கடவுளின் வாக்குறுதி செயல்பட்டது என்பதை மரியாள் அறிக்கை செய்கிறார்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக

ஆண்டவரின் அருட்பணியில் உங்கள் ஆயரம்மா

*Mrs . E . Nancy Baskar*



# பெண்ணே! பெண்ணே!

பெண்ணே! பெண்ணே!
பேரன்பு கொண்டவளே,
அன்னையாய் அன்பு மனைவியாய்
தங்கை தமக்கையாய்
அவதாரம் கண்டவளே ...

பெண்ணிலுள்ளே கருவாகி
உருவாகி மானிடனாய்
மாதெய்வம் மண்ணில் வந்தார் ...
மண்ணின் மக்கள் எல்லாரும்
மாட்சி பெறவே வழியானார் ...

வேதத்தின் பக்கங்களில்
வெவ்வேறு சாட்சிகள் ...
பெண்ணே உன் வாழ்வுக்கு
ஒவ்வொன்றும் ஏணிகள் ...

ஏவாளாய் யாரிடமும்
ஏமாந்து அழியாமல்,
சொல் பேச்சு கேட்காத
லோத்தின் மனைவிப்போல்
உப்புத்தூண் ஆகாமல்,
யோபுவின் மனைவிபோல்
கஷ்டத்தில் கடவுளை தூஷிக்காமல் ...

பிள்ளைக்காய் வேண்டி
நிற்கும் ஆகாராய்,
குடும்பத்தை அரவணைத்து
செல்லும் நகோமியாய்,
நிலையான நல்லெண்ணம்
கொண்ட ரூத்தாய்,
விவேகமுள்ள மிரியாமாய்,
தேச நலனுக்காய்
மன்றாடும் எஸ்தராய்,
நல்ல பங்கை
தெரிந்துக்கொண்ட மரியாளாய்,
மண்ணில் வாழ்ந்து
மகிபர் இயேசுவின்
மகத்துவ நாமம்
மாட்சியுறவே, சாட்சி
பகர்ந்துயர்வாயே ...

ARTICLE BY

SIS. PAMELA JENNIFER J.P.

WOMEN'S Fellowship




கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரர்களே உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் என் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் கர்த்தர்தாமே இந்த மாதம் முழுவதும் நம்மோடு கூட இருந்து நம்மை ஆசீர்வதிப்பாராக இந்த மாதத்தில் வாக்குதத்தம் ஆக கர்த்தர் நம்மோடு பேச விரும்புகிற வசனம்

**"அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதின்படி செய்யுங்கள்"**

**-யோவான் 2:5**

கானா ஊர் கலியாணத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, அங்கு திராட்சரசம் இல்லாதபொழுது அவர்களுக்குத் திராட்சரசம் கொடுக்கும்படியாகச் இவ்விதம் மரியாள் அங்கிருந்த வேலைக்காரர் பார்த்து அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதின்படி செய்யுங்கள் எனக்கு அன்பான சகோதரர்களே இந்த மாதத்தில் கர்த்தர் நமக்கு என்ன சொல்லுகிறாரோ அவைகளையே செய்ய நம்மை நாமே முழுவதுமாய் ஒப்புக் கொடுப்போம் அப்பொழுதுதான் நாம் என்ன சொல்கிறோமோ, நாம் என்ன விரும்புகிறோமோ, நாம் என்ன செய்யச் சொல்லி அவனுடைய சமூகத்தில் ஜெபிக்கிறோமோ, கர்த்தர் அதை நமக்கு நிறைவேற்றுவார் நாம் அவர் சொல்கிறபடி செய்வோமானால் கட்டாயம் நாம் சொல்லுகிறபடி அவர் செய்வார்..( இயேசு )ஜாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள் என்று சொன்னார். தண்ணீர் ஒரு அற்பமானது தான். ஆனால் ஆண்டவர் ஜாடிகளை தண்ணீர்களால் நிரப்பச் சொன்னார். ஏனென்றால் அவர் அதைத் திராட்சரசமாக மாற்றப் போகிறார். ஆண்டவருடைய மகிமை எப்பொழுதுமே அற்பமானவைகளை மகிமையானவைகளாய் மாற்றுவதே. மனிதனுடைய வாழ்க்கையிலும் அதையே செய்கிறார். அற்பமான ஒரு மனிதனை மகிமைகரமாக மாற்றுகிறார். வீணாய்ப்

போன ஒரு மனிதனை பிரயோஜனமானவனாய் மாற்றுகிறார். எல்லாமே தேவனுடைய உன்னதமான ஒரு செயல். எளியவைகளைக் கொண்டு ஆண்டவர் செய்யக்கூடிய அவருடைய மகத்துவத்தை விளங்கப்பண்ணுகிறார். இதுவே தேவன் செய்யக்கூடிய உன்னதமான காரியம். நம்முடைய வாழ்க்கையில் நாம் அற்பமாக எண்ணப்படலாம். ஆனால் கர்த்தருடைய கரங்களில் நம்மை ஒப்புக்கொடுக்கும்பொழுது ஆண்டவர் அதை மகிமைகரமாக மாற்றுகிறார். மனிதர்களிடத்தில் நாம் புகழ்ச்சியைப் பெற்றுக்கொள்ள வாஞ்சிப்போமானால் அது தவறு. ஆனால் தேவனிடத்தில் நாம் புகழ்ச்சியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர் இந்தக் காரியத்தைச் செய்கிறார். அநேகர் இந்த உலக மனிதர்கள் பார்வையில் தாங்கள் உயர்வாய்க் காணப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு ஜெபிக்கின்றார்கள். ஆனால் அந்த ஜெபம் தேவனால் கேட்கப்படுவதில்லை. அவர் நம்முடைய இருதயத்தை அறிந்திருக்கிறார். ஆண்டவருக்கு நம்மை ஒப்புக்கொடுப்போம்.
அவரே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் கர்த்தர் உங்களை தொடர்ந்து ஆசீர்வதிப்பாராக.

ஆமென்.,

MEN'S FELLOWSHIP





# உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா

**"கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி: பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்"**
**(நியாயா 6:12)**

அன்பானவர்களே! கர்த்தர் உங்களோடு இருக்கும் பொழுது நீங்களும் பராக்கிரமசாலிகளே. அதை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். மிதியானியர்கள் கையில் அடிமைகளாக அடிமைப்பட்டு வாழ்ந்த இந்த மக்களுக்கு தப்பிக்க கூடிய ஒரு பராக்கிரமசாலியை கர்த்தர் எழுப்புகிறார். அவன் கிதியோன். தேவன் தம்முடைய மக்களை விடுவிக்கும் படியான பணியில் கருவிகளாக இருக்கக்கூடிய கிதியோன்கள் இன்றைக்குத் தேவை. நீங்கள் உங்கள் வாழ்க்கையில் ஒரு கிதியோனாக இருக்க விரும்புகிறீர்களா? ஒருவேளை நீங்கள் சொல்லலாம் என்னால் முடியாது என்று. ஆனால் ஆண்டவர் "அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப் பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார்" (நியாயா 6:14) என்று சொல்லுகிறார்.

உங்களுக்கு இருக்கும் பலம் உங்களால் ஆனதல்ல. அது கர்த்தரால் உண்டானது. இன்றைக்கு உங்களுக்கு என்ன பலம் இருக்கிறதோ அந்த பலத்தோடே சுவிசேஷத்தை அறிவியுங்கள். தேவன் உங்கள் அருகில் இருப்பேன் என்கிற உறுதியான வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறார். 'நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்' என்று சொல்லுகிறார். விடுதலை என்பதை கர்த்தர் வாக்கு பண்ணியிருக்கிறார். அதை அவர் நிறைவேற்றுவார். ஏனென்று கேட்டால் 'உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா' என்கிறார். நம்மை அனுப்புகிறவர் மனிதன் அல்ல. நம்மை அனுப்புகிறவர் சர்வவல்லமையுள்ள தேவன். ஆகவே கர்த்தருடைய அழைப்புக்கும், அவருடைய வழிநடத்துதலுக்கும் நம்மை ஒப்புக்கொடுப்போம். தேவனுடைய கரத்தில் நம் வாழ்க்கையை ஒப்புக்கொடுக்கும் பொழுது, நம்மைக் கொண்டு தேவன் பெரிய காரியங்களைச் செய்வார்.

YOUTH FELLOWSHIP




# ALICE MARVAL

ஆலிஸ் மார்வால்

(26 JAN 1865 - 05 JAN 1904)

**1857ஆம் ஆண்டின் சிப்பாய் கலகம் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் நன்கு அறியப்பட்ட நிகழ்வு. இருபுறமும் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் தங்கள் உயிர்களை இழந்தார்கள். பேஷ்வா நானா சாகேப், நூற்றுக்கணக்கான பிரிட்டிஷ் பெண்களை கான்பூரில் உள்ள பிகர் என்ற ஒரு பெரிய வளாகத்தில் கைது செய்து, அவர்களைக் கொல்லும்படி தனது சிப்பாய்களுக்கு இரக்கமின்றி உத்தரவிட்டார். படுகொலைக்குப் பிறகு அங்கு அடைந்த பிரிட்டிஷ் இராணுவம் செய்ய முடிந்தது அந்த வளாகத்தில் முழங்கால் வரை இருந்த இரத்தத்தில் மிதக்கும் உடல்களைப் பார்ப்பதுதான்!**




**பிரிட்டிஷர்கள் பின்னர் பழிவாங்கினாலும், "சொசைட்டி ஃபர் ப்ரோபகேடின் ஆஃப் காஸ்பெல் இன் ஃபாரின் பார்ட்ஸ்"** (FORGIN BIRDS) **(வெளிநாட்டுப் பகுதிகளில் நற்செய்தியைப் பரப்புவதற்கான சங்கம்) மரணமடைந்தவர்களுக்காக கூட பழிவாங்க முயன்றது. ஆனால் அது ஹிம்சை பாதையில் அல்ல அதற்காக அந்த அமைப்பு நூற்றுக்கணக்கான**

**ஆலிஸ் தனது சிறு வயதிலிருந்தே ஒரு ஆர்வமுள்ள கிறிஸ்தவராக இருந்தார். அவரது கல்வி சார்ந்த முயற்சிகள் அவருடைய ஆவிக்குரிய அனுபவங்களை மங்கச் செய்ய அவர் விடவில்லை. முழுமையான புத்திசாலித்தனத்துடன், அவர் தன் சகாக்களுக்கு கல்வியில் உதவி செய்து, கிறிஸ்துவின் அன்பை மெதுவாக அவர்களிடம் பகிர்ந்து கொள்ள அவருடைய அந்த வாய்ப்புகளாக பயன்படுத்தினார். கல்வி அறிவு தனக்காக பயன்படுத்தாமல், கிறிஸ்துவின் சேவைக்காக பயன்படுத்த வேண்டும் என்பதை அவர்**

எப்பொழுதும் மனதில் வைத்திருந்தார். எனவே, பட்டம் பெற்ற பிறகு, அவர் ஒரு மிஷனரியாக பணியாற்ற எஸ்.பி.ஜி. அமைப்பில் சேர்ந்தார், பின்னர் அது அவரை கான்பூருக்கு அனுப்பியது. கான்பூரின் நிலைமை மற்றும் ஒரு பிரிட்டிஷ் மிஷனரியாக அவருக்கு ஏற்படும். ஆபத்தை நன்கு அறிந்த ஆலிஸ் 1899ஆம் ஆண்டில் தைரியமாக அப்பகுதிக்கு வந்தார். அங்கு அவர் உள்ளூர் பெண்களுக்கு மருத்துவ சேவை வழங்க செயிண்ட் கேத்தரின்ஸ் மருத்துவமனையை நிறுவினார். ஆரம்பத்தில் அவர் மருத்துவமனை கட்டுவதிலும் உள்ளூர் மக்களுக்கு மருத்துவ சேவை அளிப்பதிலும் முழுமையாக ஈடுபட்டார். இருப்பினும், விரைவில் கான்பூரில் நோய் வெடித்தது. நோயின் காரணமாக நோயாளிகள் நிறைந்த மருத்துவமனையில் பகலில் இடைவெளி இல்லாமல் உழைத்தாலும், பொது இடங்களில் வர அனுமதிக்கப்படாத பெண்களுக்கு சேவை வழங்க அவர் இரவில் வீடு வீடாகச் சென்றார். அவர் தூக்கமில்லாத இரவுகளைக் கழித்து அந்த கொடிய நோயிலிருந்து மீள அநேக பேருக்கு உதவினார். எனினும், அவருடைய மென்மையான உடல் அதிகப்படியான அழுத்தத்தை தாங்க முடியவில்லை. மேலும் அந்த நோய் அவரையும் தாக்கியது. 1904 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் தேதி தனது முடிவு வந்ததென்று உணர்ந்த. ஆலிஸ் மார்வால், மிகுந்த வலியின் மத்தியிலும், "நான் இங்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன்" என்று கூறி இவ்வுலகில் தனது ஓட்டத்தை முடித்தார்.

ஆம் அன்பானவர்களே! தேவன் நம் ஒவ்வொருவர் மேலும் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். அவருடைய திட்டத்திற்கு நம்மை ஒப்புக்கொடுத்து அவருடைய அழைப்புக்கு நாம் செவி கொடுப்போமானால் நம்முடைய வாழ்வும் அனேகருக்கு ஆசீர்வாதமாக அமையும். ஒப்புக்கொடுப்போமா? தேவன் தாமே நம் ஒவ்வொருவருக்கும் அவ்வண்ணமான ஆசீர்வாதத்தை நிறைவாய்த் தருவாராக.

ARTICLE BY

M.NESAMONY & FAMILY



# NOVEMBER

## Congratulations

### KIDS COLOURING

Bernicia
Smyrna Syntche
Jania Preni
Johan Sanjo
Hazel Hartlyn
Reagan Shan
Kariss Angelo
Chris Gabiriel

### CODE WORD

Patricia
Jania Preni
Johan Sanjo
Hazel Hartlyn
Kariss Angelo
Sherin Shah
Jason Eric

### WORD SEARCH

Sherin Shah
Johan Sanjo
Roshan
Eric Aaron
Jason Eric

### CROSS WORD

Shelbino
Roshan
Johan Sanjo
Sherin Shah
Eric Aaron
Joshua

### BIBLE QUIZ

Shelbino
Roshan
Joshua

**WELL Done!**

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject: Your name / Quiz, type / Month - Year**

**To Church Email: csitcalain@gmail.com**

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# GENESIS: 31-40

# ஆதியாகமம்: 31–40

NOVEMBER '22 - QUESTIONS

*1. குவியலுக்கு லாபான் வைத்த பெயர் என்ன? யாக்கோபு வைத்த பெயர் என்ன?*

*2. யாக்கோபு நொண்டி நடந்த ஸ்தலத்தின் பெயர் என்ன?*



*3. ஏசா திரும்பி எங்கு சென்றார்?*

*4. சீகேம்மின் தகப்பனார் பெயர் என்ன?*

*5. ராகேல் எங்கு பிள்ளை பெற்றார்?*

*6. அமலேக்கைப் பெற்ற தாய் யார்?*

*7. யோசேப்பை யாரிடத்தில் விற்றார்கள்?*




*8. தாமாருடைய மாமனார் எங்கு சென்றார் என்று அறிவிக்கப்பட்டது?*

*9. யோசேப்பு யாரிடத்தில் விலைக்கு வாங்கப்பட்டார்?*

*10. சொப்பனத்தில் கண்ட திராட்சைச் செடியில் எத்தனை கொடிகள் இருந்தது?*

## நவம்பர் - 2022-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. ஆதி: 21:14 | 2. ஆதி: 22:23 | 3. ஆதி: 23:19 | 4. ஆதி: 24:62 | 5. ஆதி: 25:17
6. ஆதி: 26:16 | 7. ஆதி: 28:10 | 8. ஆதி: 29:16 | 9. ஆதி: 29:16 | 10. ஆதி: 30:33


**திருமதி. ஜோனிஷ் ஹெர்ஷெல், திருமதி.ஜெயந்தா ஜான், திருமதி.ஜெயின் ராஜவேல், திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ரோஸ்லின் பாலாஜி, திருமதி.பிப்லின் நெல்சன், திருமதி.ஹெலன் கம்பீரம் திருமதி.ஜமுணா ராணி, திருமதி. பமீலா டேனியல், செல்வி.அஜின்ஷா, செல்வி.ஷெரின்ஷா**

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.
மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.


YOUR NAME / BIBLE QUIZ / APR'22 | SENT TO: CSITCALAIN@GMAIL.COM

056 766 8348

# KIDS COLOURING



PRIMARY

## Guess the Christmas songs based on the pictures

1.  ______________________________
2.  ______________________________
3.  ______________________________
4.  ______________________________
5.  ______________________________
6.  ______________________________
7.  ______________________________
8.  ______________________________
9.  ______________________________
10.  ______________________________
11.  ______________________________
12.  ______________________________
13.  ______________________________
14.  ______________________________
15.  ______________________________
16.  ______________________________
17.  ______________________________
18.  ______________________________




# Christmas Word Search




| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| O | P | R | I | N | L | I | G | G | Q | Q | R | G | L | U | N | H | Z | E | F |
| C | H | Z | Q | E | J | A | O | R | E | I | N | D | E | E | R | I | R | L | Q |
| M | B | M | O | L | S | Z | T | V | W | U | P | O | B | N | D | T | T | V | V |
| N | H | N | J | O | L | L | Y | N | U | Y | E | N | M | I | H | C | C | E | U |
| X | P | M | N | P | P | S | F | I | A | G | K | A | C | L | Y | V | H | S | Z |
| D | L | A | E | H | X | C | E | L | B | S | F | P | G | C | E | T | Q | E | G |
| Z | O | M | N | T | H | E | D | A | Y | S | G | N | I | T | E | E | R | G | M |
| S | D | Z | I | R | V | T | Q | P | S | G | S | B | W | C | C | P | W | V | Q |
| P | U | I | Z | O | V | A | J | A | E | O | R | U | A | C | F | S | O | G | S |
| G | R | E | H | N | X | R | L | B | P | Y | N | N | N | H | R | S | O | I | L |
| B | N | Z | C | S | T | B | H | J | O | M | D | P | I | M | O | A | B | V | M |
| Y | M | I | S | T | L | E | T | O | E | Y | R | D | E | E | S | M | C | I | U |
| G | O | C | N | O | R | L | D | K | C | O | Q | O | N | R | T | T | W | N | B |
| W | K | Y | Q | C | Z | E | J | A | G | O | V | T | D | R | Y | S | D | G | Q |
| L | O | R | T | K | L | C | N | I | C | G | P | N | R | Y | L | I | N | X | S |
| J | N | X | J | I | R | E | F | B | A | V | A | P | J | E | H | R | D | C | Z |
| X | L | W | O | N | H | T | A | E | R | W | V | I | I | L | E | H | A | Y | E |
| W | L | R | D | G | Z | G | Y | L | D | J | C | G | N | X | E | C | M | B | O |
| M | Y | A | D | I | L | O | H | L | S | U | H | J | A | W | N | Z | A | M | J |
| | | | | B | T | V | H | S | K | M | W | S | E | L | D | N | A | C | U |

| | | | |
|---|---|---|---|
| BELLS | RUDOLPH | ELVES | JOY |
| CANDLES | SANTA | FROSTY | MERRY |
| CANDY CANE | SEASON | GIFT | MISTLETOE |
| CARDS | SLEIGH | GIVING | NOEL |
| CELEBRATE | STOCKING | GREETINGS | NORTH POLE |
| CHIMNEY | TREE | HOLIDAY | REINDEER |
| CHRISTMAS | WREATH | JOLLY | |

# Christmas Crossword




## Down

**1.** Famous Christmas ballet
**2.** Skin hanging from a turkey's neck
**3.** Day after Christmas
**6.** Helps Santa make presents
**7.** Top of a Christmas tree
**9.** He stole Christmas
**10.** Number of ghosts in A Christmas Carol?

## Across

**4.** Company that uses Santa in adverts
**5.** Best selling Christmas song
**8.** Female turkey
**9.** Where gingerbread houses started
**11.** Spirited added to Christmas pudding
**12.** Gift from the wise men

SENIOR
& above

# December

## HAPPY BIRTHDAY

| | |
|---|---|
| 01-DEC | MRS. KALYANI SANKARAN |
| 01-DEC | MASTR. JEFFRY IMMANUEL S/O JOEL RANJITH KUMAR |
| 02-DEC | MS. ANGELIN SOPHIA NELSON D/O NELSON SOPITHA RAJ |
| 04-DEC | MR. ABISHEK S/O P.DAVID RAJ |
| 04-DEC | MASTR. CHRIS GABRIEL S/O DANIEL DURAI SINGH |
| 11-DEC | MASTR. AAREN CHRISTO S/O PREM JENIFER . A |
| 12-DEC | MRS. MAHESWARY VELU YAMUNA |
| 12-DEC | MR. JAYAPRADHEEP CHRISTOPHER |
| 13-DEC | MASTR. RICHARD S/O RAVINDRA |
| 16-DEC | MASTR. BIJU MOHAN S/O MOHANA KUMAR.R |
| 17-DEC | MRS. SWEETLIN ABI |
| 17-DEC | J.JOHANA |
| 19-DEC | MR. AUGUSTIN.J |
| 24-DEC | MASTR. RISHON YOJIT S/O SATHISH KUMAR.T |
| 25-DEC | MR. BALAJI RAMAIYAN |
| 25-DEC | MASTR. HARYTER SAMUEL S/O C.HAVIN HEBA |
| 27-DEC | MASTR. SHELBINO PAUL S/O MELBIN PAUL |
| 28-DEC | MRS. PRASANA |
| 28-DEC | MRS. Y.RENA IVOLAT JASMINE |
| 31-DEC | MR. SATHISH KUMAR.T |
| 31-DEC | MS. M.ANGELINE SHALLY D/O Y.MESIAH DAS |

## Happy Anniversary

| | |
|---|---|
| 08-DEC | MR. ALVIN KUMAR ASIRMANNS / MRS. M.SUBHA ALVIN |
| 09-DEC | MR.BERLIN JOSE / MRS.GODSHILIN |
| 13-DEC | MR. TIMOTHEUS DILL SURESH / MRS. SATHVIKALAKSHMI |
| 14-DEC | MR. THIYAGU MURUGARAJ / MRS. JENNIFER |
| 20-DEC | MR. SANTHOSH KUMAR.M / MRS. HELINA SANTHOSH |
| 27-DEC | MR. SELVISTOR SOLOMON / MRS. MANJUSHAH |
| 27-DEC | DR. PRADEEV RAJ / MRS. RAMYA MERGARATEE |
| 28-DEC | MR. HERCHIL HARISH / MRS. BLESSY GRACE JONISH |
| 28-DEC | MR. JOEL RANJITH KUMAR / MRS. SHAFEENA |
| 28-DEC | DR. APPAVOO NICSON KENNEDY / MRS. VIMALA NICSON |
| 29-DEC | MR. NESAMONY.M / MRS. HEPSI BAI NESAMONY |
| 29-DEC | MR. P.DAVID RAJ / MRS. VASANTHA SELVA KUMARI |
| 29-DEC | MR. ROBERT WILSON.T / MRS. AJI KUMARI |
| 29-DEC | MR. DERIN JOY / MRS. FANNY ESTHER |











# Ecumenical Carol

December 03, 2022





CSI Tamil Parish Alain



CSI South Kerala Diocese Dubai



Tamil Christian Fellowship Alain



CSI Tamil Parish Abu Dhabi

# Ecumenical Carol

December 03, 2022


CSI Tamil Parish Ajman


Sharjah Tamil Congregation CSI K.K Diocese


CNI Tamil Parish Sharjah



# Ecumenical Carol

December 03, 2022

*The people who walked in darkness have seen a great light: Isaiah 9:2.*

# MERRY Christmas

## AND HAPPY NEW YEAR

*May this Christmas end the Present Year on a Cheerful note and make way for a fresh and bright New Year. Here's wishing you all a Merry Christmas & Happy New Year - 2023*



**MS. B.N KARISS ANGELO**

**MRS NANCY ANGELO & REV. S.P BASKAR**




**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**

**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**